ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2080/25 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16
*2080/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**அச்சிடுதல் தொழிலுக்கான சம்பளச் சபை**

அச்சிடுதல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,**
செயலாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05,
2018, யூலை 10.

1A - G28103 - 202 (2018/07)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

அச்சிடுதல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9,436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

### II ஆம் பாகம்

தொழிலாளர் வகுப்பு

"அ" வகுப்புத் தொழிலாளர்

செய்தித்தாள் உற்பத்தியில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டோரல்லாத செய்முறை சித்திர வேலையாளர், செய்முறை கமரா இயக்குநர்கள், செய்முறை செதுக்குநர் ஆட்கள், சிலைச்சித்திர எதிரிட்டு எந்திரம் பேணுவோர், சுழற்சி எந்திரம் பேணுவோர், புகைப்படம் பிடிப்போரும் ரொடாகிறேன் எந்திரம் பேணுவோரும், தகரத்தட்டு அச்சாளர்கள், படலம் கோர்ப்போர், வரியெழுத்துப்பொறி இயக்குநர்கள், ஒற்றையச்சு வார்ப்புப் பலகை இயக்குநர்கள், லட்லோ இயக்குநர்கள், வரியெழுத்துப் பொறி இயந்திரத் தொழிலாளர், அச்சிடுதல் இயந்திரத் தொழிலாளர்கள், செய்முறை செதுக்குநர்களும் ஏற்றுநர்களும், செய்முறை அச்சாளர்கள், கீழ்வரி எழுத்துப் பொறிமாற்றுநர்கள், வரியெழுத்துப்பொறி செவ்வைபார்க்குநர், செவ்வைபார்க்குநர். (பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனைய வேலையாட்கள்)

"ஆ" வகுப்புத் தொழிலாளர்

ஒற்றையச்செழுத்து வார்ப்போர், இயக்குநர்கள் (பரிசாரர்கள்), மிகைவார்ப்புப் பரிசாரர்கள், எல்றோட் எந்திர இயக்குநர்கள், அச்சுக் கோர்ப்போர், நிரை கட்டுபவர்களும் செவ்வை செய்வோரும், அச்சகர்கள், எழுத்தச்சு உருளை எந்திரம் பேணுவோர், கட்டுநரும், பட்டுத்திரை எந்திர இயக்குநர்களும் நம்பர் முத்திரையச்சு ஆக்குநர்களும், புடைப்பு முத்திரைச் சாயம் அழுத்தல் எந்திர இயக்குநர்கள், தையல் எந்திர இயக்குநர்கள், மடிக்கும் எந்திர இயக்குநர்கள், அட்டைப் பெட்டி வெட்டுதல், ஒட்டுதல் இயந்திர இயக்குநர்கள், வெட்டுநர்கள் (கையினாலும் எந்திரத்தினாலும்), கிலற்றின் எந்திர இயக்குநர்களும், கில்டேஸ் கோடிடுனர்களும் (கையினாலும் எந்திரத்தினாலும்), கில்டிங் எந்திர இயக்குநர்கள், தின் அச்சினால் பல்லுருளை இயந்திர இயக்குநர்கள், வார்ப்புச் சாலையாளர், வார்ப்புச்சாலைத்தகடு வார்ப்பவர், தட்டச்சு வார்ப்போர், முழுதாகத் தன்னியக்க எந்திரங்கள் இயக்குகின்ற உருளை வார்த்தல், (உருளை வார்க்கும் துவக்கினைப் பயன்படுத்தி) பிளேற்றன் எந்திரம் பேணுவோர், உருளை வார்ப்போர், பிளேற்றன் இயந்திரம் பேணுவோர் (கையினால் ஊட்டப்பட்டது) உருளை வார்ப்போர் (கையினால்).

"இ" வகுப்புத் தொழிலாளர்

வார்ப்புச்சாலைத் தகடு வெட்டுவோர், வார்ப்புச் சாலைத் தொழிலாளர் சுழற்சி எந்திரத் தொழிலாளர், பொதியிடுநர், தொகை எண்ணுவோர் அத்துடன் செவ்வை பார்ப்போர்.

"ஈ" வகுப்புத் தொழிலாளர்

18 வயதுக்குக் குறையாத திறமையற்ற வேலையாளர்.

"உ" வகுப்புத் தொழிலாளர்

18 வயதுக்குக் குறைந்த திறமையற்ற வேலையாளர்.

"ஊ" வகுப்புத் தொழிலாளர்

காவற்காரர்

**தொழில் பயில்வோரும், தொழிற் பயிற்சி பெறுவோருமல்லாத வேலையாளர்களுக்கான அடிப்படைச் சம்பள வீதம்.**

| ஊழிய ஆண்டு | 'அ' வகுப்பு ரூ. ச. | 'ஆ' வகுப்பு ரூ. ச. | 'இ' வகுப்பு ரூ. ச. | 'ஈ' வகுப்பு ரூ. ச. | 'உ' வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,560.00 | 11,170.00 | 10,780.00 | 10,390.00 | 10,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,760.00 | 11,345.00 | 10,930.00 | 10,515.00 | 10,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,960.00 | 11,520.00 | 11,080.00 | 10,640.00 | 10,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,160.00 | 11,695.00 | 11,230.00 | 10,765.00 | 10,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,360.00 | 11,870.00 | 11,380.00 | 11,890.00 | 10,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,560.00 | 12,045.00 | 11,530.00 | 11,015.00 | 10,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 12,760.00 | 12,220.00 | 11,680.00 | 11,140.00 | 10,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,960.00 | 12,395.00 | 11,830.00 | 11,265.00 | 10,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,160.00 | 12,570.00 | 11,980.00 | 11,390.00 | 10,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,360.00 | 12,745.00 | 12,130.00 | 11,515.00 | 10,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 13,560.00 | 12,920.00 | 12,280.00 | 11,640.00 | 11,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 13,760.00 | 13,095.00 | 12,430.00 | 11,765.00 | 11,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 13,960.00 | 13,270.00 | 12,580.00 | 11,890.00 | 11,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 14,160.00 | 13,445.00 | 12,730.00 | 12,015.00 | 11,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 14,360.00 | 13,620.00 | 12,880.00 | 12,140.00 | 11,400.00 |

**தொழில் வகுப்புக்களிலுள்ள பயில்வோருக்கும் தொழிற் பயிற்சி பெறுவோருக்கும்.**

| ஊழிய ஆண்டு | 'அ' வகுப்பு ரூ. ச. | 'ஆ' வகுப்பு ரூ. ச. | 'இ' வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 8,000.00 | 7,730.00 | 7,450.00 |
| 2 ஆம் ஆண்டு | 8,150.00 | 7,855.00 | 7,550.00 |
| 3 ஆம் ஆண்டு | 8,300.00 | 7,980.00 | 7,650.00 |
| 4 ஆம் ஆண்டு | 8,450.00 | 8,105.00 | 7,750.00 |
| 5 ஆம் ஆண்டு | 8,600.00 | 8,230.00 | 7,850.00 |

8 - 55

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.